ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டில் குண்டடிப்பட்ட

மாற்றுத்திறனாளிக்கு போதைக் கும்பல் கொலை மிரட்டல்!

காவல்துறையினர் உடனே நடவடிக்கை எடுக்க கழக துணைப் பொதுச் செயலாளர்

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



சென்னை,நவ.12-

ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டில் காலில் குண்டடிப்பட்ட மாற்றுத்திறனாளி ஒருவருக்கு போதைக் கும்பல் கொலை மிரட்டல் விடுவதால், காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக கழகத் துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. சமூகவலைதளப் பதிவு வருமாறு:

தூத்துக்குடியில் பிரின்ஸ்டன் என்பவர் தனது மனைவி மற்றும் கைக்குழந்தையுடன் இருசக்கர வாகனத்தில் பயணித்தபோது, அவரது வாகனத்தின் மீது மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்து மோதிய போதைக் கும்பலால் கொலைவெறித் தாக்குதலுக்கு உள்ளாகி, மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

காவல்துறையிடம் புகார் அளித்தால் கொன்றுவிடுவதாகக் குடும்பத்தினரை அந்தக் கும்பல் மிரட்டியதாகவும் பாதிக்கப்பட்டவர் கூறியுள்ளார்.

ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் காலில் குண்டடிபட்டு, செயற்கைக் கால் பொருத்தப்பட்ட மாற்றுத்திறனாளியான பிரின்ஸ்டனுக்கு நேர்ந்த இக்கொடுமைக்கு யார் பொறுப்பு? தவெக ஆட்சியில் சாமானியர்கள் சாலையில் செல்ல முடியாத அளவுக்குப் போதைக் கும்பல்களின் அட்டூழியங்கள் அதிகரித்துவிட்டன.

பாதிக்கப்பட்டவர் அளித்திருக்கும் புகாரின் மீது



உடனடியாக காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரின்ஸ்டனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அரியலூர் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. இதய அறுவை சிகிச்சைக்குப் பிறகு, நேரில் சந்தித்து உரையாடினார். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சா.சி.சிவசங்கரிடம் உடல் நிலை குறித்து விசாரித்து விரைவில் முழு நலம் பெற வாழ்த்துத் தெரிவித்தார்.

ஆந்திர ரெட்டி கேங்கோடு சேர்ந்து நள்ளிரவில்தான்

தமிழ்நாட்டிற்கு விரோதமான முடிவுகள் எடுக்கப்படுவதாக சொல்வது உண்மையா?

முதல்வருக்கு – சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, நவ.12 -

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழும், தமிழனும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு இரு மொழிக் கொள்கை, சாமானியனும் மருத்துவம், பொறியியல் பட்டம் பெற 69% இட ஒதுக்கீடு சுதந்திர தினத்தன்று முதல்வர் கோட்டையில் கொடியேற்றும் உரிமை, ஆளுநர் சட்ட மன்ற மசோதாவை 3 மாதத்தில் முடிவெடுக்கும் உரிமை இவையெல்லாம் தி.மு.க. சமூகநீதிக் கொள்கையால் ஒன்றிய அரசிடமும், உச்சநீதி மன்றத்திலும் போராடிப் பெற்றுத்தந்த உரிமை என்பதை மறந்து விட்டீர்களா CM Sir?

அதே வழியில் தான் தி.மு.க. தலைவர்களும், தொண்டர்களும் இன்றும் உழைக்கிறார்கள். ஆனால்



விஜய் அவர்களே! உங்கள் ரசிகர்கள் தங்களின் 30 ஆண்டு கால திரைப்பயணம் 2 ஆண்டு கால அரசியல் பயணத்தில் உங்களிடமிருந்து கற்றுக்கொண்ட புகை பிடித்தல், 24 மணி நேரமும் போதையிலிருப்பது, பாலியல் சீண்டல்கள், கஞ்சா போன்ற போதை வஸ்துக்கள் தயாரித்து விற்பதால் தமிழ்நாடு கடந்த 6 மாதமாக குட்டிச்சுவராகி வருவது உங்களுக்குத் தெரியவில்லையா CM Sir?

தற்போது மாநில அரசின் உரிமைகளான கல்வி, கனிமவளம், மீன்பிடிக்கும் உரிமைகள் மற்றும் GST வரி விதிப்பு ஆகியவற்றை தொடர்ந்து ஒன்றிய அரசு பறித்து வருவதை தடுக்கத்தான்.

"குரியன் ஜோசப்" தலைமையில் குழு அமைத்து அதன் 10 பரிந்துரைகள் கடந்த பிப்ரவரி மாதம் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சமர்ப்பித்தது தமிழ் நாட்டின் வளர்ச்சிக்குத் தான் என்பதை படித்து புரிந்துகொள்ள முடியவில்லையா CM Sir?

இதுபோல் தமிழ்நாட்டிற்கு விரோதமான உத்தரவுகளெல்லாம் உங்கள் ஆந்திர ரெட்டி கேங்கோடு சேர்ந்து நள்ளிரவில் தான் முடிவெடுக்கப்படுவதாக சொல்லப்படுவது உண்மையா CM Sir? உண்மையென்றால் "நள்ளிரவு உத்தரவுகளை" இத்தோடு நிறுத்திவிட்டு பகல்பொழுதில் கோட்டையில் அமர்ந்து நல் ஆலோசனைகளைப் பெற்று தமிழ் நாட்டு மக்கள் படும் துன்பங்களான பாலியல் சீண்டல்கள், கஞ்சா போன்ற போதை வஸ்துக்கள் தயாரித்து விற்பது, கொலை, கொள்ளை, சிறுவர் சிறுமியர் கடத்தல், மீனவர் உரிமைகளை பறிகொடுத்தல், கடுமையான விலைவாசி உயர்வு, மின் கட்டண உயர்வு, பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பது போன்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் உங்கள் அரசையும், தொண்டர்களையும் தடுத்து நிறுத்திட எப்போது வருவீர்கள் CM Sir?

இவ்வாறு அவர் தனது வலைதளத்தில் கூறியுள்ளார்.

கம்பம் நா.இராமகிருஷ்ணன் தலைமை! கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

கம்பம் இரா.பாண்டியன் - அம்பிகா இல்லத் திருமண விழா!

இ.பெரியசாமி – ஓ.பன்னீர்செல்வம் – முன்னணியினர் வாழ்த்துரை!

கம்பம், நவ.12-

கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கம்பம் இரா. பாண்டியன் - அம்பிகா ஆகியோரின் சகோதரர் இரா.ஜெயராஜ் - பூமணி ஆகியோரின் புதல்வர் ஜெ.ராஜேஷ்குமாருக்கும், அரண்மனைப்புதூர் பி.கெஜேந்திரன் - அன்னக்கிளி ஆகியோரின் புதல்வி ஜி.அனுபிரிதாவுக்கும் மணவிழா நாளை (13.11.2026 - வெள்ளிக்கிழமை) காலை 9.15 மணியளவில் கம்பம் யாதவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

இம்மண விழாவினை கழக துணைப்பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இ.பெரியசாமி நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

மணவிழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன், ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ., கோ.தளபதி மற்றும் பெ.செல்வேந்திரன், எல்.மூக்கையா, ஆ.மகாராஜன் எம்.எல்.ஏ., ஓ.பி.ரவீந்திரநாத், எஸ்.பி.எம். சையதுகான், ஓ.ஆர்.நாராயணன், குமரேசன், ஆர்.இராஜாங்கம், என்.ஜெயராஜ், செல்வி ஏ.ஜெகதீஷ், கீதா, ஜி.பி.ராஜா, எம்.ஜெயக்குமார், பெ.ஆசையன், எஸ்.லட்சுமணன், கே.எஸ்.சரவணக்குமார், மதுரை மா.ஒச்சுபாலு, மதுரை ஜெயராமன், மூவேந்திரன், தேன்மொழி கோபிநாதன், வனிதா நெப்போலியன், காந்திமதி ராஜேந்திரன், எம்.ஆர்.சீனிவாசன், கே.சத்தியமூர்த்தி, த.மனோகரன், பி.டி.செல்லப்பாண்டியன், குருகுமரன், பி.முருகேசன், எம்.சங்கர், தங்கபாண்டியன், தே.சி.இ. ஜெயசந்திரன், ஆர்.தினகரன், சாந்தா, கே.சிங்கராஜ், எல்.ரவிச்சந்திரன், இளங்கோவன், மு.இராமமூர்த்தி, ரெக்ஸ், எம்.என்.காளிமுத்து ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



எம்.இ.வீரபாண்டியன், சி.பால்பாண்டிராஜன் வரவேற்கின்றனர்.

இம்மணவிழாவில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக, ஊராட்சி மன்ற, வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடுக:

பெண் மாவட்ட ஆட்சியருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்!

மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் தி.மு.க. சார்பில் மனு!

கள்ளக்குறிச்சி, நவ.12-

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்கு தமிழக வெற்றி கழகத்தின் கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக புகார் குறித்து சி.பி.ஐ. அல்லது சி.பி.சி.ஐ.டி. முழுமையாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து பெண் அதிகாரிகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் தி.மு.க. மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் கார்த்திகேயன் மனு அளித்துள்ளார். சட்டமன்ற உறுப்பினர் வசந்தவேல், நாடாளுமன்ற உறுப்பினர் மலைய ரசன் ஆகியோர் உடனிருந்தனர்.

'மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பில்லை என்பது வெட்கக் கேடானது' என்று வசந்தம் கார்த்திகேயன் அப்போது பேட்டியளித்தார்.

தேவைப்பட்டால் உரிய நடவடிக்கை கோரி நீதிமன்றத்தையும், மகளிர் ஆணையத்தையும் தி.மு.க. அணுகும் எனவும், சட்ட மன்ற உறுப்பினரின் நடவடிக்கையை கண்டித்து மாபெரும் கண்டன ஊர்வலம் மற்றும் போராட்டம் நடத்திட அனுமதி கேட்டிருப்பதாகவும் வசந்தம் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

அரசு ஊழியர்கள் 48 மணி நேரம் சிறையில் இருந்தால் சஸ்பெண்ட்!

உச்சநீதிமன்றம் உத்தரவு!

சென்னை, நவ. 12 –

அரசு ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டு 48 மணி நேரத்துக்கும் மேலாக நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டால், அவர் தானாகவே பணியிடைநீக்கம் செய்யப்பட்டவராகக் கருதப்படுவார். இதற்காக அரசு தனியாக இடைநீக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

பீகாரில் லஞ்சப் புகாரில் கைது செய்யப்பட்ட அரசு மருத்துவமனை நிர்வாகியின் ஜாமீன் வழக்கை விசாரித்தபோது நீதிபதிகள் இந்த முக்கியமான கருத்தை தெரிவித்துள்ளனர்.

பீகார் மாநிலம் சமஸ்திபூரில் அரசு சதர் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் விஷ்வஜீத் சிங் என்பவர் நிர்வாகியாக பணியாற்றி வந்தார்.

அதே மருத்துவமனையில் ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்த்து வந்த ஊழியர் ஒருவருக்கு ரூ.36,421 சம்பள நிலுவை தொகை வழங்கப்பட வேண்டியிருந்தது. இந்தப் பணத்தை பெற்று தருவதற்காக விஷ்வஜீத் சிங் ரூ.4,000 லஞ்சம் கேட்டதாக புகார் எழுந்தது.


இதுதொடர்பாக அந்த ஒப்பந்த ஊழியர் ஊழல் தடுப்புப் பிரிவு போலீசாரிடம் புகார் அளித்தார். இதன்பேரில் 2025ம் ஆண்டு விஷ்வஜீத் சிங் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட விஷ்வஜீத் சிங் சுமார் 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார். அதாவது, போலீஸ் காவலில் அல்லாமல் நீதிமன்ற உத்தரவின்படி ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த சம்பந்தப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றத்தின் விசாரணையின் போது, விஷ்வஜீத் சிங்கின் பணி நிலை குறித்தும் நீதிபதிகள் கவனத்தில் கொண்டனர். அவர் கைது செய்யப்பட்ட பிறகு சுமார் 15 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளார்.

அப்போது நீதிபதி ஜே.பி. பர்திவாலா "ஒரு அரசு ஊழியர் கைது செய்யப்பட்டு 48 மணி நேரத்துக்கும் மேலாக நீதிமன்றக் காவலில் இருந்தால், அவர் தானாகவே பணியிடை நீக்கம் செய்யப்பட்டவராகக் கருதப்படுவார். இதற்காக அரசு தனியாக இடைநீக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை" என்று தீர்ப்பு கூறினார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; "தீபாவளி நாளில் கொலைகள் நடப்பது ஒன்றும் புதிதல்ல" என்கிறாரே ஒரு அமைச்சர். இப்படி கூடவா விளக்கம் சொல்லுவாங்க...

போண்டி : ஆமாய்யா; அந்த '5 கோடி ரூபாய் புகழ்' அமைச்சர்தானே அப்படி சொல்லி இருக்கிறார். அது சரி! மத்த நாளிலேயும் கொலை நடக்குதே பரவாயில்லையா? கொலைகளை தடுக்க வழி இருக்கான்னு பார்க்காமல் நியாயப்படுத்துகிறாரே! நல்ல மந்திரி! நல்ல கவர்ன்மெண்ட்.



அண்மையில் மறைந்த முன்னாள் ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் எம்.ராமச்சந்திரன் அவர்களின் இல்லம் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆறுதல் கூறினார். உடன் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி, பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, ஒன்றியக் கழகச் செயலாளர் செல்வகுமார், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பொறியாளர் ஆர்.பி.பரமேஸ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.இராஜேந்திரன், பெரம்பலூர் மாவட்ட துணைச் செயலாளர் டி.சி.பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கீழ்பெண்ணாத்தூர் காமராஜர் நகரைச் சேர்ந்த சேகர் – மகேஸ்வரி ஆகியோரின் மகள் வள்ளியம்மாள் (பள்ளி மாணவி வயது 15) சமுத்திரம் ஏரியில் குளிக்கச் சென்ற போது ஏரியில் மூழ்கி இறந்தார். அவரது உடலுக்கு சட்டமன்ற முன்னாள் துணை தலைவர் கு.பிச்சாண்டி மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் ஒன்றிய செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம், பேரூராட்சி தலைவர் சரவணன், பேரூராட்சி உறுப்பினர் மணி, கீழ்பெண்ணாத்தூர் இளைஞர் அணி அமைப்பாளர் வினோத்குமார் மற்றும் கழக உடன்பிறப்புகள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.